


கன்னியாகுமரி மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சோ.இளங்கோ அவர்கள், சமூக நலத்துறை சார்பாக, நடைபெற்ற சர்வதேச முதியோர் தினவிழா நிகழ்ச்சியில்,
முதியோர்களுக்கு நலத்திட்ட உதவிகளை சுவாமிநாதபுரம், பவ்வர் அய்யா வைகுண்டர் முதியோர் இல்லத்தில் இன்று (18.10.2016) வழங்கினார்.
மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி. கா. உமா மகேஸ்வரி உடனுள்ளார்.

செ.வெ.எண்: 728/2016 நாள்: 18.10.2016

**சர்வதேச முதியோர் தினவிழா நிகழ்ச்சி**
**கன்னியாகுமரி மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ அவர்கள் தலைமையில் இன்று (18.10.2016) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சோ.இளங்கோ அவர்கள், சமூக நலத்துறை சார்பாக, சர்வதேச உலக முதியோர் தினவிழா நிகழ்ச்சியினை, சுவாமிநாதபுரம், பவ்வர் அய்யா வைகுண்டர் முதியோர் இல்லத்தில் இன்று (18.10.2016) குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 1-ம் தேதி சர்வதேச முதியோர் தினமாக சுகாதார நிறுவனத்தின் மூலம் அறிவிக்கப்பட்டு, நமது மாவட்டத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, இன்று சுவாமிநாதபுரம், பவ்வர் அய்யா வைகுண்டர் முதியோர் இல்லத்தில் வைத்து முதியோர் தினவிழா நிகழச்சி சிறப்பாக நடைபெற்று கொண்டிருக்கிறது.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு கணினி எவ்வளவு முக்கியத்துவம் உள்ளதோ, அதேபோல் தான் ஒரு மனிதனின் வளர்ச்சிக்கு பெற்றோர்கள் முக்கிய பங்களிக்கும். குறிப்பாக முதியோர்கள் வழங்கும் அறிவுரைகளை பின்பற்றி வாழ்ந்து வந்தாலே, வாழ்வில் சிறந்த நிலையை அடைய முடியும். மேலும் அவர்களிடம் உள்ள அனுபவம், தற்போது உள்ள இளைஞர்களிடம் இருப்பதில்லை. 2005-ஆம் ஆண்டு உலகம் முழுவதும் 500 மில்லியன் முதியோர்கள் உள்ளார்கள் என்ற சர்வதேச ஆய்வில் தெரிவிக்கப்பட்டது. தற்போது (2016-ஆம் ஆண்டு) ஆய்வில் சுமார் 2050 மில்லியன் முதியோர்கள் உள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. இன்றைய இளைஞர்கள் ஆகிய நீங்கள், நாளை முதியோர்கள் ஆவீர்கள். எனவே இளைஞர்கள் தங்களது பெற்றோர்களுக்கு ஏற்பட்ட நிலை தான் நாளைக்கு உங்களுக்கும் ஏற்பட வாய்ப்புள்ளது. என் தாய், தந்தைக்கு இணையாக இருக்கும் முதியோர்கள் ஆகிய நீங்கள், ஒருபோதும் பிள்ளைகள் தங்களை தனியாக தவிக்கவிட்டு சென்று விட்டார்கள் என்று எண்ணி வருத்தம் அடைய வேண்டாம். ஏனென்றால் அது உங்கள் மனதினை பாதிக்கும். மனம் பாதிக்கப்பட்டால், நிச்சயமாக உடல்நல குறைவு ஏற்படும். இவற்றையெல்லாம் மறந்து விட்டு, சுதந்திரமாக நீங்கள் வாழ வேண்டும் என்பதற்காக தான் அரசாங்கம் இதுபோன்ற முதியோர் இல்லம் அமைக்கப்பட்டு, சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருவதுடன், உதவித்தொகைகள் (மாதந்தோறும் ஒரு நபருக்கு ரூ.750/-) வழங்கப்பட்டு வருகிறது.

எனவே இந்த முதியோர் இல்லத்தில் உள்ள முதியோர்கள் (25 நபர்கள்) இவற்றை அனைத்தும் நீங்கள் பெற்று, மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்று இறைவனை கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

முன்னதாக பவ்வர் அய்யர் வைகுண்டர் முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் திருமதி. சௌந்தர்யா அவர்கள் முதியோர் இல்லத்தில் பராமரிக்கப்படுவதை குறித்து பேசினார்கள். தொடர்ந்து முதியோர் இல்லத்தின் மேலாளர் செல்வி சி. கீதா அவர்கள் ஆண்டறிக்கை வாசித்தார்.

பின்னர், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் முதியோர்களுக்கு காலணிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி. கா. உமா மகேஸ்வரி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. ப. காந்தி, பவ்வர் சேவை நிறுவனத்தின் இயக்குநர் திரு. நா. இராமச்சந்திரன், திரு. அர்ச்சுணன் மற்றும் முதியோர் இல்ல பணியாளர்கள், முதியோர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.